
@EN
2025-26
ரூ தமிழ்நாடு
வேளாண் நிதிநிலை அறிக்கை
எல்லார்க்கும் எல்லாம்
வளர்ச்சிக்கான
பட்ஜெட்
விவசாயத்துடன்
உழவர்களின் நலனை
கருத்தில் கொண்டு
வேளாண் பட்ஜெட்
தயாரிப்பு.
எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்
வேளாண்மை-உழவர் நலத்துறை
அமைச்சர்

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர் "**

பல்வேறு அரசுகளின் நிழல்களைத், தமது குடைநிழலின்கீழ்க் கொண்டு வரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள் என்று உழவர்களின் பெருமையினை அய்யன் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

உழவர்கள் பாதுகாக்கப்பட்டால், அவர்கள் அனைத்து மக்களையும் பாதுகாப்பார்கள் என்பதனைப் புறநானூறு,

**"பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்,**
**குடிபுறம் தருகுவை யாயின், நின்**
**அடிபுறம் தருகுவர், அடங்கா தோரே."**

**என்ற பாடல் மூலம் கூறுகிறது.**

*"காளை மாடுகளைப் போற்றி உழவு செய்யும் உழவர்களின் சுமையை நீ குறைத்து அவர்களைப் பேணினால் அடங்காத உன் பகைவர் உன்னிடம் அடிபணிவர்"* என்று மன்னனுக்குப் புலவர் அறிவுரை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதனை நன்கு உணர்ந்துதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மேன்மைமிகு உழவுத் தொழிலையும், உன்னதமான உழவர்களையும் மேம்படுத்திட உதவிடும் வகையில் வேளாண்மையோடு உழவர் நலனையும் முன்னிறுத்தி, வேளாண்மைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படும் என்று அறிவித்தார். அதனை நிறைவேற்றும் வகையில் 2021-22 ஆம் ஆண்டு முதல் இதுவரை நான்கு வேளாண்மை நிதிநிலை அறிக்கைகள் வெளியிடப்பட்டு பல்வேறு

திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன; தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை – உழவர் நலத்துறையின் அமைச்சராக, வேளாண் நிதிநிலை அறிக்கையை ஐந்தாவது முறையாக, இம்மாமன்றத்தில் அளித்திடும் அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கியுள்ள, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களுக்கு, வேளாண் பெருமக்கள் சார்பாகவும் வேளாண்மை–உழவர் நலத்துறை சார்பாகவும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**" இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு"**

இயல்புக்கேற்ப, நீதி வழுவாமல் செங்கோலினைச் செலுத்தும் மன்னனது நாட்டில், பருவமழையும் குன்றா விளைச்சலும் ஒருசேரக் கிடைக்கப்பெறும், என்னும் அய்யன் திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செங்கோலாட்சியில் நன்மழையும் நல்விளைச்சலும் பெற்று, தொழில்கள் பெருகி, பொருளாதாரத்தில் தமிழ்நாடு, இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், வேளாண் பெருமக்கள் மற்றும் வேளாண் சார்ந்த சான்றோர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை வேளாண்மை நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக நிறைவேற்றி, இத்திருநாட்டில் தன்னிகரில்லா முத்திரை பதித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, அனைவரின் சார்பாகவும், நன்றிகளைக் காணிக்கையாக்கி 2025–2026 ஆம் ஆண்டில் பல புதிய திட்டங்களுடன் கூடிய வேளாண்மை

நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்தில் படைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலகோர் அனைவருக்கும் உழைத்து, வேளாண் பொருள்களை உற்பத்தி செய்து, உணவளித்து உயிர்காக்கும் அன்னையைப் போன்றவர்கள் உழவர்கள். அத்தகைய பெருமைக்குரிய உழவர்தம் வாழ்வில், இந்த நிதிநிலை அறிக்கையும் வளர்ச்சி கூட்டி, மலர்ச்சி காணச் செய்திடும் என்று நம்புகிறேன்.

உணவுக்காகவும் உடைக்காகவும் மட்டுமே உழவு செய்யத் தொடங்கி, கால வெள்ளத்தில் பல மாற்றங்களை எதிர்கொண்டு, மக்கள் சமுதாயத்தின் தேவைக்கேற்ப, வேளாண் விளைபொருள்களை விளைவித்துத்தரும் பெரும் பொறுப்பை, நம் உழவர்கள் மேற்கொண்டுள்ளனர். இதனால், தற்போது வேளாண்மையானது, அறிவியல் தொழில்நுட்பங்களின் துணைகொண்டு, பல்கிப்பெருகி, பல முன்னேற்றங்களைப் பெற்று, இன்று துல்லிய வேளாண்மையாகவும் (Precision Agriculture), மின்னணு வேளாண்மையாகவும் (Digital Agriculture) செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (Artificial Intelligence), வலைதளம் மூலம் செயல்படும் உணரி சார் தொழில்நுட்ப (Internet of things) வேளாண்மையாகவும், பல அறிவியல் தொழில்நுட்பங்களைத் தன்னுள் ஈர்த்துக்கொண்டு வளர்ந்து கொண்டே இருக்கிறது. இது இன்னும் வளரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

கடந்த நான்கு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட, வேளாண் நிதிநிலை அறிக்கைகளில் அறிவித்து செயல்படுத்தப்பட்ட திட்டங்களால் அடைந்துள்ள சாதனைகளை, இந்த மாமன்றத்தில் எடுத்துரைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மக்கள்தொகை பெருகிவரும் சூழலிலும், தொழில் துறையும் சேவைத்துறையும் மிகுந்த வேகத்தில் வளர்ந்துவரும் வேளையிலும், உழவர்களை வேளாண்மையில் இருத்தி, உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கி, உணவுப்பாதுகாப்பை உறுதி செய்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார். அவரது தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாக, 2019–2020 ஆம் ஆண்டில் 146 இலட்சத்து 77 ஆயிரம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடிப் பரப்பு, 2023–24 ஆம் ஆண்டில் 151 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டில் 29 இலட்சத்து 74 ஆயிரம் ஏக்கராக இருந்த இருபோக சாகுபடிப் பரப்பு 2023–2024 ஆம் ஆண்டில் 33 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் என்ற அளவினை எட்டியுள்ளது. மேலும், பயிர் உற்பத்தித்திறனை உயர்த்திடும் முயற்சியில், பல்வேறு உயர்தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தி, வேளாண்பயிர்களில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் கேழ்வரகு உற்பத்தித்திறனில் முதல் இடத்திலும், மக்காச்சோளம், எண்ணெய்வித்துகள், கரும்பு ஆகியவற்றில் இரண்டாம் இடத்திலும், நிலக்கடலை, குறுதானியங்கள் உற்பத்தித்திறனில் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளால் அதிக அளவில் பயிர் இழப்புகள் ஏற்பட்டபோதும் வேளாண்மை–உழவர் நலத்துறையால் செயல்படுத்தப்பட்ட சிறப்பான திட்டங்களினால் 2021–22 முதல் 2023–24ஆம் ஆண்டு வரை 346 இலட்சத்து 38 ஆயிரம் மெட்ரிக் டன் உணவுதானிய உற்பத்தி அடையப்பட்டுள்ளது. இச்சாதனைகளால்,

**"இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எண்ணரும் பெரு நாடு**
**கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடு"**

*"இனிமையான சோலைகளாலும், நெடிய வயல்களாலும் சூழப்பட்ட இயற்கை வளம் பொருந்திய நம் நாட்டில் கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றிக் கிடைக்கின்றன."*

எனும் பாரதியின் கூற்றை மெய்ப்பித்துள்ளனர் நம் உழவர்கள்.

உழவர்களின் நீர்ப்பாசன ஆதாரத்திற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு முன்னுரிமை அடிப்படையில் புதிய பாசன மின் இணைப்புகளை 2021–22 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகின்றது. இந்த சிறப்பு முயற்சியின் காரணமாக, இதுவரை, ஒரு இலட்சத்து 81 ஆயிரம் பாசன மின் இணைப்புகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டு, வறண்ட நிலங்களும் வளம் பெற்றுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாடு இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்ட நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், 55,000 உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, 1,109 வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 98 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்கப்பட்டு உழவர்களின் இயந்திரத் தேவைகள் மொத்தம் 510 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையிலும், விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தடுத்து, இலாபம் ஈட்டிடவும் 488 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடங்கள், சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், உலர்களங்கள், தரம் பிரிப்புக் கூடங்கள் ஆகியவை கட்டப்பட்டதோடு 172 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

***"எதிர்காலம் இளைஞர்கள் கையில்".*** எனவேதான், இளைஞர்களிடம் வேளாண்மையில் ஆர்வத்தை ஏற்படுத்தி வேளாண்மைக்குக் கைகொடுக்கும் வகையில், 2021–22 ஆம் ஆண்டு முதல் வேளாண் பட்டதாரிகளை வேளாண் தொழில்முனைவோராக்கும் திட்டத்தில் 435 இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில் தொடங்க தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு அவர்கள் கிராமப்புரங்களில் வேளாண்மை செழிக்க உதவி வருகின்றனர். பிற இளைஞர்களுக்கும் ஊக்கத்தினை அளித்து வருகின்றனர்.

**கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் வேளாண்மை** – உழவர் நலத்துறைத் திட்டங்களுடன், பிறதுறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கடந்த நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தியதன் விளைவாக 46,000 ஏக்கர் பரப்பளவில் தரிசு நிலங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், ஆதி திராவிட, பழங்குடியின உழவர்களுக்கு 1,611 ஆழ்துளை மற்றும் குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 46 இலட்சம் தென்னங்கன்றுகள், 16 இலட்சம் பழச்செடித்தொகுப்புகள் போன்றவை விநியோகிக்கப்பட்டுள்ளன. **இத்திட்டத்தில் 787 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 50 இலட்சத்து 71 ஆயிரம் உழவர்கள் பயனடைந்துள்ளனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் **"மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்"** திட்டத்தில் 4,000 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள், 23,000 மண்புழு உரப்படுக்கைகள், 10 இலட்சம் வேப்பமரக்கன்றுகள், 50 இலட்சம் ஆடாதொடா மற்றும் நொச்சி நடவுச்செடிகள், 8 இலட்சத்து 88 ஆயிரம்

ஊட்டச்சத்துத் தளைகள் **உள்ளிட்ட திட்டக்கூறுகளின்கீழ் 21 இலட்சத்து 35 ஆயிரம் உழவர்கள் பயன்பெற்றுள்ளனர்.**

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு உழவர்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், வேளாண் இயந்திரங்கள் போன்ற திட்டங்களில் கூடுதல் பயன்பெற, 60 முதல் 70 சதவீதம் வரை மானியம் பெறும் வகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் **61 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை, 15,800 ஆதி திராவிடர், பழங்குடியின உழவர்கள் பயனடைந்துள்ளனர்.**

நுண்ணீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தைப் பரவலாக்கி, பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் போன்ற நீர் சேகரிப்புக் கட்டுமானங்களை அமைத்து, டெல்டா மாவட்டங்களிலுள்ள 'சி', மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களிலும், நீர்சேகரிப்புக் கட்டமைப்புகளிலும் தூர்வாரியதால், பாசன நீரின் பயன்பாட்டுத்திறன் மேம்படுத்தப்பட்டு, நிலத்தடி நீரும் செறிவூட்டப்பட்டுள்ளது. இச்செயல்பாடுகளால், 2020–21 ஆம் ஆண்டில் 89 இலட்சத்து ஒன்பதாயிரம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற சாகுபடிப் பரப்பு, 2023–24 ஆம் ஆண்டில் 94 இலட்சத்து 68 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

உழவர்களின் நலன் கருதி, ஒன்றிய அரசால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல், சன்ன இரகத்திற்குக் குவிண்டால் ஒன்றிற்கு 130 ரூபாயும், சாதாரண இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 105 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. நான்கு ஆண்டுகளில் இதுவரை 147 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

செய்யப்பட்டு 1,452 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கும், ஒரு மெட்ரிக் டன்னிற்கு 215 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு, இதுவரை 425 இலட்சம் மெட்ரிக் டன் கரும்புக்கு 848 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் ஏற்பட்டுவரும் தீவிர காலநிலை மாற்றங்கள் காரணமாக, பல்வேறு இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட்டு, பயிர் சேதங்களின் மூலம் உற்பத்தியில் தாக்கத்தையும், உழவர்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறான இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து உழவர்களை மீட்டு, அவர்களின் வருவாய் இழப்பினைச் சரிசெய்து, வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக, **இயற்கைப் பேரிடர்களால் வேளாண்மை, தோட்டக்கலைப்பயிர்களில்ஏற்பட்டசேதங்களுக்குநிவாரணமாக, 1,631 கோடியே 53 இலட்சம் ரூபாய் நிதி, 20 இலட்சத்து 84 ஆயிரம் உழவர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிர்க்காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக 5,242 கோடி ரூபாய் நிதியானது, கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 30 இலட்சம் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினைப் போற்றிடும் வகையில்,** சென்னை அண்ணா மேம்பாலம் அருகே டாக்டர். ராதாகிருஷ்ணன் சாலையில் பல்வேறு சிறப்பம்சங்களுடன், உலகத்தரம் வாய்ந்த **கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா** அமைக்கப்பட்டு, சென்னையில் அனைவரும் சென்று களிக்கக்கூடிய, மகிழ்ச்சியூட்டும் பூங்காவாகப் பயனளித்து வருகிறது.

**இவ்வாறு, வேளாண்மைத் துறையில் அடையப்பட்ட சாதனைகளை, 13.03.2025 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024–2025 உறுதிப்படுத்துகிறது.** இந்த ஆய்வறிக்கையின்படி, பெரும்பாலும் பருவமழையை நம்பியே தமிழ்நாட்டில் வேளாண்மை நடைபெற்றாலும் வேளாண்மைத்துறை தமிழ்நாட்டின் மொத்த மாநில மதிப்பு கூட்டலில் (GSVA) 1.5 இலட்சம் கோடி ரூபாய் பங்களிப்புடன் ஐந்தாவது பெரிய துறையாகத் திகழ்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சோதனைகளைச் சாதனைகளாக்கும் நமது உழவர்களின் திறன் இதன்மூலம் வெளிப்படுவதுடன், வேளாண்மைத்துறைக்கு அரசால் அளிக்கப்படும் முக்கியத்துவமும் தெரிய வருகிறது.

தமிழ்நாட்டு உழவர்களுக்கு, பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் வாயிலாக வழங்கப்படும் கடன், 2019–20 இல் 1.83 இலட்சம் கோடி ரூபாயிலிருந்து 2023–24 இல் 3.58 இலட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து வணிக வங்கிகள் வழங்கும் பயிர்க்கடனில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

**தோட்டக்கலைப்பயிர்களுக்கான மொத்தப் பரப்பளவு 2023–24இல் 16.3 இலட்சம் எக்டரை அடைந்து தோட்டக்கலைப்பயிர்கள் தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியில் முக்கிய உந்து சக்தியாக விளங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

நிலத்தடி நீர்ப்பற்றாக்குறை, காலநிலை மாற்றம் ஆகிய சவால்களை தமிழ்நாடு சமாளித்தால் வேளாண்மை, அதைச்சார்ந்த துறைகளில் விரைவான வளர்ச்சியை அடையமுடியும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றை எதிர்கொள்ள ஏதுவான திட்டங்கள் தொடர்ந்து தீட்டப்பட்டு,

வளர்ச்சியினை எட்ட, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திராவிட மாடல் என்பது**
**"எதையும் உருவாக்கும்**
**எதையும் சீர் செய்யும்**
**எதையும் ஒன்றிணைக்கும்"**

**என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல்,** திராவிட மாடல் உழவர்களுக்கு பல சிறப்பான திட்டங்களை உருவாக்கி வருகிறது. இயற்கைச் சீற்றங்களால் சிதைக்கப்பட்ட விளை நிலங்களில் இருந்த மணல் திட்டுக்களை அகற்றிச் சீர்செய்துள்ளது. அனைத்துத் திட்டங்களையும் ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியினை உறுதி செய்ததுதான் திராவிட மாடல் ஆட்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிப்பது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த நான்காண்டுகளும் நடத்தியதைப் போலவே, இந்த ஆண்டும் மாநிலம் முழுவதும் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றில், கலந்துகொண்ட பல்வேறு மாவட்டங்களின் உழவர்கள், விவசாயச் சங்கங்கள், இயற்கை உழவர்கள், கரும்பு விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், வேளாண் இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், விதை உற்பத்தியாளர்கள், வேளாண் வணிகர்கள், முட்டை, பால் உற்பத்தியாளர்கள், கடல்சார் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள் வேளாண் வல்லுநர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துகளை நேரடியாகவும், மின்னஞ்சல்,

மனுக்கள் மூலமாகவும் பெற்று, அவற்றில் கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், உழவர்களின் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்துடன் 2025-2026ஆம் ஆண்டிற்குரிய, வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையில், உழவர்களின் தேவைகளைநிறைவேற்றும்புதியதிட்டங்கள்வடிவமைக்கப்பட்டு, உழவர் நலன் மேம்படும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கை, வேளாண் பெருமக்கள் மிடுக்காக நடைபோட்டு, மகிழ்ச்சி அடையும் விதமாகப் புதுப்பொலிவுடன் சிறப்பான திட்டங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**1. முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்**

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 4 ஆயிரம் வேளாண் பட்டதாரிகளும், 600க்கும் மேற்பட்ட வேளாண் பட்டயதாரர்களும், வேளாண் கல்வியை நிறைவு செய்கின்றனர். இவர்களின் படிப்பறிவும், தொழில்நுட்பத்திறனும் உழவர்களுக்கு உதவியாக இருந்து, **வேளாண்மை செழித்திட உதவிடும் வகையில் 1,000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தில், 10 இலட்சம் ரூபாய் முதல் 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இம்மையங்கள் அமைத்திட 30 சதவீத மானியமாக 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதற்கென 42 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** இம்மையங்களில் உழவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய் மேலாண்மைக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். அத்துடன்

நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும்.

2. **பயிர் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உணவு தானிய உற்பத்தியினை உயர்த்திட சிறப்புத் தொகுப்புத்திட்டம்**

தமிழ்நாட்டில்டெல்டாஅல்லாத29மாவட்டங்களில்சராசரியாக 34 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. கார், குறுவை, சொர்ணவாரி பருவங்களில் நெல் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உணவு தானிய உற்பத்தியினை உயர்த்திட **டெல்டா அல்லாத மாவட்டங்களில் சிறப்புத் தொகுப்பு உழவர்களுக்கு வழங்கப்படும். நெல் இயந்திர நடவு மானியம், தரமான சான்று பெற்ற விதைகள் உள்ளிட்டவற்றுக்கு 102 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இதேபோல், டெல்டா மாவட்டங்களில் சராசரியாக 18 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. குறுவைப்பருவத்தில், நெல் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உணவு தானிய உற்பத்தியினை உயர்த்திட, **டெல்டா மாவட்டங்களில் சிறப்புத் தொகுப்பு உழவர்களுக்கு வழங்கப்படும். நெல் இயந்திர நடவு மானியம், தரமான சான்று பெற்ற விதைகள் உள்ளிட்டவற்றுக்கு 58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

3. **மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்வதை ஊக்குவிக்கும் திட்டம்**

முற்காலத்தில், உழவு மேற்கொள்வது **"பொன்ஏர் பூட்டுதல்", "சித்திரமேழி வைபவம்", "மதி ஏர்", "நல்லேர்"** எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது. மன்னர்கள் ஆட்சி செய்த காலங்களில், சித்திரை முதல் நாளில் பொன்ஏர் உழவு என்பது பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது. **"நான் முதலில் ஓர்**

**உழவன், அதற்கு அடுத்துதான் மன்னன்"** என்று பறைசாற்றும் விதமாகவும், கோடை உழவின் அவசியத்தை எடுத்துக்கூறும் வகையிலும், அந்நாளில் பொன்ஏர் உழவை மன்னர்கள் தொடங்கி வைப்பார்களாம். தற்போதுள்ள வேளாண் தொழிலாளர் பற்றாக்குறை உள்ளிட்ட, பல்வேறு காரணங்களால், கோடை உழவு செய்வது பரவலாகக் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் 56 இலட்சத்து 41 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் பருவமழையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. எனவே, 2025 – 2026–ஆம் ஆண்டில் **3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் கோடை உழவு செய்திட, எக்டருக்கு 2,000 ரூபாய் வீதம் மானியம் வழங்கிட, 24 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**4. மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம்**

தமிழ்நாட்டில் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்திலும், காடும் காடு சார்ந்த முல்லை நிலத்திலும் மக்கள் எவ்வாறு வேளாண்மை செய்தார்கள் என்று சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இப்பகுதிகளில் மானாவாரிப் பயிர்களான வரகு, தினை, கம்பு போன்றவை பயிரிடப்பட்டதையும், அவற்றை மலை மகளிர் பாதுகாப்பதையும் கண் முன்னே விரிக்கின்றன.

**"குருவி ஒப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச் சென்றவைகி**
**அருவி ஆடியும் சுனை குடைந்தும்"**

என்ற வரியில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பெண்கள் தினைப்புனங்களில் குருவிகளை ஓட்டியும், கிளிகளை விரட்டியும், பயிரினைக் காத்தும் தொழிலை மேற்கொண்டதை சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகிறது.

பல்வேறு திட்டங்களில் பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்த போதிலும், **இயற்கையோடு இணைந்து வாழ்ந்து சுற்றுச்சூழலுக்கும், உயிரியல் பன்மயத்திற்கும் பாதுகாப்பு அளித்துவரும் மலைவாழ் உழவர்களுக்கென சிறப்புத்திட்டம்** ஒன்றைச் செயல்படுத்தி அவர்கள் வாழ்வாதாரத்தினை உயர்த்த வேண்டியது அவசியம்.

**2025–26ஆம் ஆண்டில் சுமார் 63 ஆயிரம் மலைவாழ் உழவர்கள் பயனடையும் வகையில், குறுதானிய சாகுபடி, இடுபொருள்கள் விநியோகம், காய்கறிப்பயிர்களில் பரப்பு விரிவாக்கம், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், நுண்ணீர்ப்பாசனம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்றவற்றிற்கு மானியம் வழங்கிட 22 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மலைவாழ் உழவர் முன்னேற்றத்திட்டம் செயல்படுத்தப்படும்.** மேலும், இப்பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டம் திருவண்ணாமலை, நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருப்பத்தூர், திருநெல்வேலி, வேலூர், கன்னியாகுமரி, தேனி, தென்காசி, விருதுநகர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, திருப்பூர், விழுப்புரம், கோயம்புத்தூர் ஆகிய 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

**5. உழவரைத் தேடி வேளாண்மை–உழவர் நலத்துறை**

வேளாண்மை–உழவர் நலத்துறையின் கீழ் இயங்கிவரும் அனைத்துத் துறைகளின் வட்டார அலுவலர்கள், சார்புத் துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆகியோர்களால்,

உழவர்களை அவர்களது வருவாய் கிராமங்களிலேயே நேரடியாகச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு, வேளாண்மையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களையும், வேளாண்மை– உழவர் நலத்துறை மற்றும் சார்புத்துறைகளின் திட்டங்களையும் எடுத்துக்கூறி அவர்கள் பயன்பெறும் வகையில், மாதம் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் முகாம் நடத்தப்படும். மொத்தமுள்ள 17,116 வருவாய் கிராமங்களிலும் ஓராண்டுக்குள் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

6. **முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு, நிதி உதவிகளை உயர்த்தி வழங்குதல்**

தமிழ்நாட்டில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சிறு, குறு உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் முதியோர் ஓய்வூதியத் தொகை, மகப்பேறு உதவித்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, விபத்து நிவாரணத் தொகை, இறுதிச்சடங்கு நிவாரணத்தொகை, கல்வி உதவித்தொகை, ஆகியவை வழங்கப்படுகின்றன.

வேளாண்மையை நம்பியுள்ள நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரம், சாகுபடிக்காலங்களில் கிடைக்கும் பணிகளைப் பொறுத்தே அமைகிறது. இயற்கைப் பேரிடர்களால் பயிர் சாகுபடி பாதிக்கும் போது உழவர்களுடன் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு,

i. விபத்து மரணத்துக்கான இழப்பீடு, ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாகவும்,

ii. விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கு நிதி உதவி, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும்,

iii. இயற்கை மரணத்துக்கான நிதி உதவி, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாகவும்,

iv. இறுதிச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி, 2,500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும்

உயர்த்தி வழங்கப்படும். இதனால் விளிம்பு நிலையிலுள்ள நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் குடும்ப நலன் பாதுகாக்கப்படும்.

**7. முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்.**

முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் பசுந்தாள் உரவிதைகள் விநியோகம், மண்வள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண்காடுகள் உருவாக்குதல், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் போன்ற **15 திட்டக்கூறுகளுடன் 142 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**8. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்**

அனைத்து சிற்றூர்களையும் தன்னிறைவு பெறச் செய்யும் நோக்கத்தோடு தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி,

உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் உன்னத முயற்சியில் **"கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்"** கடந்த நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2025-26 ஆம் ஆண்டில், மீதமுள்ள 2,338 **கிராம ஊராட்சிகளில், சுமார் 9 இலட்சத்து 36 ஆயிரம் உழவர்கள் பயனடையும் வகையில், 269 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**9. மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்**

மானாவாரியிலும் அதிக மகசூல் தந்து, உழவர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்கச் செய்வதில், மக்காச்சோளப் பயிர் முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாட்டில் மக்காச்சோளம் 10 இலட்சத்து 13 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 28 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மக்காச்சோளச் சாகுபடி மூலம், உழவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கச்செய்யும் வகையில், **மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் ஒரு இலட்சத்து 87 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 79 ஆயிரம் உழவர்கள் பயனடையும் வகையில், 40 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**10. எண்ணெய்வித்துகள் இயக்கம்**

தமிழ்நாட்டில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற பிரதான எண்ணெய்வித்துப் பயிர்கள் சராசரியாக 10 இலட்சத்து நான்காயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. உணவுஎண்ணெய்த் தேவையில் தன்னிறைவு அடையும் வகையில், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய பயிர்களின் பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு,

எண்ணெய்வித்துகள் இயக்கம், 2025–26 ஆம் **ஆண்டில் இரண்டு இலட்சத்து 16 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சுமார் 90 ஆயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் 108 கோடியே 6 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**11. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்**

**" கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து**
**வாலிதின் விளைந்த புது வரகு அரிய**
**தினை கொய்ய கவ்வை கறுப்ப, அவரைக்**
**கொழுங்கொடி விளர்க் காய்"**

என்ற புறநானூற்றுப் பாடலில், கபிலர் பாரியின் நாட்டில் சாமை, தினை, வரகு விளைந்து இருப்பதையும், அவற்றை அறுவடை செய்யும் போது கொடி அவரையும் விளைந்து இருப்பதையும், கூறியுள்ளதைக் காணும்பொழுது சிறுதானியங்களின் சிறப்பை உணர முடிகிறது.

தமிழ்நாடு சிறுதானிய இயக்கமானது, தமிழ்நாடு அரசால், 2023–24 ஆம் ஆண்டு முதல் 2027–28 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுத் திட்டமாக அறிவிக்கப்பட்டு, வேளாண்மை சார்ந்த அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உழவர் குழுக்கள் அமைத்தல், பயிர் சாகுபடித் தொகுப்பு மானியம் வழங்குதல், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல் போன்ற திட்டக்கூறுகளோடு, 52 **கோடியே 44 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில், 2025–26 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

## 12. இயற்கை வேளாண்மைக்கான திட்டங்கள்

இயற்கை வேளாண்மையில், இரசாயனக் கலப்பு இல்லாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த, வயல்களில் கிடைக்கக்கூடிய வளங்களான பயிர்கள், கால்நடைகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றின் கழிவுகளை மறுசுழற்சி செய்து ஒருங்கிணைத்து விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

**இயற்கை வேளாண்மையைப் பரவலாக்கம் செய்திடும் விதமாக பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் மொத்தம் 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.**

i. இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஒருங்கிணைத்து, குழுக்கள் அமைத்து 7,500 உழவர்கள் பயனடையும் வகையில் **இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் இரண்டாண்டுத் திட்டமாக செயல்படுத்தப்படும்.**

ii. இயற்கை மற்றும் உயிர்ம வேளாண் முறைகளில் சாகுபடி செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்கள் எளிதில் நுகர்வோருக்குக் கிடைக்கச்செய்யும் வகையில், தமிழ்நாட்டில் **இயற்கை வேளாண் பொருட்களை பூமாலை வணிகவளாகம் உள்ளிட்ட அரசுக் கட்டடங்களில் சந்தைப்படுத்த, உரிய வசதிகள் செய்து தரப்படும்.**

iii. உழவர்களிடையே உயிர்ம வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்திட, **37 மாவட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

iv. தமிழ்நாட்டிலுள்ள **மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த, 38,600 மாணவர்கள்** உயிர்ம

வேளாண் பண்ணைகளுக்குக் **"கண்டுணர் சுற்றுலா" அழைத்துச் செல்லப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

v. உயிர்ம வேளாண் முறையில் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு வேளாண் விளைபொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி, ஏற்றுமதி செய்ய, **எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்திற்கு, முழு மானியம் வழங்கப்படும்.**

vi. **உயிர்ம வேளாண் நிலையை அடைந்த உழவர்களை ஊக்குவிக்கும் விதமாக, அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்,**

vii. மேலும், உயிர்ம வேளாண்மை **சான்றிதழ் பெற, உழவர்கள் பதிவு செய்வதற்கான கட்டணத்திற்கு முழு விலக்கு அளித்து, இலவசமாகப் பதிவு செய்யப்படும்.**

## 13. ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு உழவர்களுக்குக் கூடுதல் மானியம்

ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில்கள், நிழல்வலைக் குடில்கள் அமைத்தல், சூரியசக்தி உலர்த்திகள், சூரியசக்தி பம்பு செட்டுகள் வழங்குதல், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், பண்ணை இயந்திரங்கள் வழங்குதல் போன்ற உயர் மதிப்புத் திட்டங்களில், **ஆதிதிராவிடர், பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு உழவர்களுக்கு** அவர்களின் பங்குத்தொகையினால் ஏற்படும் பொருளாதாரச் சுமையினைக் குறைத்து உதவிடும் வகையில், நடைமுறையில் உள்ள 40 முதல் 50 சதவீத மானியத்திற்குப் பதிலாக **60 முதல் 70 சதவீத மானியம் வழங்கப்படும். இக்கூடுதல் மானியம், மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்காக, 2025 – 26 ஆம் ஆண்டில் 21 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

14. **வேளாண்மையில் அதிக உற்பத்திக்கும், தொழில்நுட்பப் பயன்பாட்டிற்கும் ரொக்கப்பரிசுகள்**

i. சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துகள், கரும்பு உள்ளிட்ட 11 பயிர்களில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, **உயர் விளைச்சல் பெறும் உழவர்களை ஊக்குவிக்க மாநில அளவில் அதிக உற்பத்தியைப் பெறும் முதல் மூன்று உழவர்களுக்கு** முதல் பரிசாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் என 33 **பரிசுகள்** வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம், 2025-26 **ஆம் ஆண்டிலும் 55 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

ii. மேலும், நவீன வேளாண் கருவிகள், நவீன சாகுபடித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவற்றைக் கண்டறிந்து கடைப்பிடிப்பதில் சிறந்து விளங்கும் மூன்று நபர்களுக்கு முதல் பரிசாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

15. **சிறந்த உயிர்ம உழவர்க்கான நம்மாழ்வார் விருது**

உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு இதர உழவர்களையும் உத்வேகத்துடன் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடச் செய்யும் உழவர்களைக் கவுரவிப்பதற்கும், சிறந்த உயிர்ம உழவர்க்கான நம்மாழ்வார் விருது வழங்கும் திட்டம் 2023-24ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2025-26ஆம் ஆண்டிலும்

இவ்வகையில் மூன்று உழவர்களுக்கு பாராட்டுப் பத்திரத்துடன் தலா இரண்டு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

### 16. குறைந்த நீர்த் தேவையுள்ள பயிர்களை ஊக்குவித்திட மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம்

பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் பயிர்ப் பாதிப்பைக் குறைக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும், அதிக நீர்த்தேவையுடைய நெற்பயிருக்கு மாற்றாகக் குறைந்த நீர்த்தேவையுடைய சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களை ஊக்குவிக்கும் வகையில், மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025–26 ஆம் ஆண்டிலும், ஒரு இலட்சம் ஏக்கரில் மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம் **ஒரு இலட்சம் உழவர்கள் பயன்பெறும் வகையில் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

### 17. தரமான விதை; தளர்விலா விளைச்சல்

உழவுத்தொழிலுக்கு முதன்மையான ஒன்று, நல் விதையே என்பதை நன்கு உணர்ந்த நம் முன்னோர்கள், சாகுபடிக்குத்தேவையான நல் விதைகளை, அரிதான ஒன்றாக, மிகவும் கவனமுடன் சேமித்து வைத்துப் பயன்படுத்தி வந்தனர். வேளாண் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்க, தரமான சான்று விதைகள், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2025–2026ஆம் ஆண்டில், நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களில் உயர் விளைச்சல் தரவல்ல இரகங்களின் சான்று விதைகள், 39,500 மெட்ரிக் டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

**2025-2026 ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகள் மற்றும் உழவர்களின் நிலங்களில் விதைப்பண்ணைகள் அமைத்து, விதைகள் கொள்முதல் செய்யப்படும். இத்திட்டத்திற்கு 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேலும், உழவர்களுக்குத் தரமான சான்று விதைகளைக் காலத்தே வழங்கிட **ஏழு அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்கள், 15 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதியதாக நிறுவப்படும்.**

உயர் விளைச்சல் தரக்கூடிய, உழவர்களால் பெரிதும் விரும்பப்படும், தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்யப்பட்ட, பிற மாநில வேளாண் பயிர் இரகங்களின் வல்லுநர், ஆதார மற்றும் சான்று விதைகள் 7,000 மெட்ரிக் டன் அளவில் கொள்முதல் செய்யப்பட்டு, ஒன்றிய, மாநில அரசுத் திட்டங்களின் கீழ் மானிய விலையில் உழவர்களுக்கு வழங்கப்படும். விதை சுத்திகரிப்பைத் துரிதப்படுத்திட ஏதுவாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் 3,000 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிக்கப்பட்டுக் கொள்முதல் செய்யப்படும்.

இதுதவிர, 2025-26ஆம் ஆண்டில், தரமான விதை உற்பத்திக்காக ஒரு இலட்சத்து 73 ஆயிரம் ஏக்கர் விதைப் பண்ணைகளைப் பதிவு செய்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்படுவதுடன், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விதை விற்பனை நிலையங்களும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு, விதைகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, **உழவர்களுக்குத் தரமான விதைகள் தொடர்ந்து கிடைக்க, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.**

**18. பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம்**

**"கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த**
**மூடைப் பண்டம் மிடைநிறைந் தன்ன"**

என்று புறநானூற்றுப் பாடல், கோடை காலத்தில் விளைந்த பஞ்சை மூட்டை மூட்டையாக வீடு நிறைய அடுக்கி வைத்திருந்ததை விவரிக்கிறது.

தமிழ்நாட்டில் பருத்தியின் தேவை அதிகரித்துள்ளதால், பருத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க, பருத்தி சாகுபடித் திட்டம் 2021-2022ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2025-2026 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**19. பயிர்க் காப்பீட்டுத் திட்டம்**

இயற்கைச் சீற்றங்களால் விளையும் பயிர்ச் சேதங்களினால் ஏற்படும் வருவாய் இழப்புகளில் இருந்து பாதுகாத்து, உழவர்களின் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்த, பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2025-2026ஆம் ஆண்டில், **35 இலட்சம் ஏக்கர் பரப்பிலான பயிர்களைக் காப்பீடு செய்யும் வகையில், 841 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**20. தமிழ்நாடு வேளாண்காடுகள் கொள்கை**

மரங்கள் மழையைப் பொழிந்து பயிர்வளத்தையும், இலை, தழைகளை உதிர்த்து மண்வளத்தையும் காக்கின்றன. எனவே உயர் மதிப்புமிக்க, அதிக பலனளிக்கும் மரங்களை சாகுபடி செய்து, உழவர்கள் கூடுதல் வருமானம் ஈட்டும் வகையில்

வேளாண் காடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. **உயர் மதிப்பு கொண்ட சந்தனம், செம்மரம், மகோகனி, ஈட்டி போன்ற மரங்களை வளர்ப்பதற்கும், அவற்றைப் பதிவு செய்தல், வெட்டுதல், விற்பனைக்கு எடுத்துச்செல்லுதல் போன்ற அனைத்து நடைமுறைகளை எளிதாக்கவும், பசுமையான தமிழ்நாட்டை உருவாக்கவும் "தமிழ்நாடு வேளாண்காடுகள் கொள்கை" வெளியிடப்படும்.**

21. **உழவர்களை அயல்நாடுகளுக்குக் கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்**

உழவர்கள், நெல் உற்பத்தித்திறனில் அதிக சாதனை அடைந்துள்ள ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் உயரிய தொழில்நுட்பங்களை நேரடியாகச் சென்று கண்டுணர்ந்து, அத்தகைய தொழில்நுட்பங்களைத் தங்கள் வயல்களில் செயல்படுத்திடும் விதமாக, **100 முன்னோடி உழவர்கள் ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்குக் கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர். இதற்கென இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

22. **தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் சான்று பெற்ற விதைகள், இடுபொருட்கள் விநியோகம்.**

தமிழ்நாடு முழுவதும் கிராம அளவில் 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் வாயிலாக. உழவர்களுக்குப் பயிர்க் கடன்கள் வழங்கப்படுவதோடு, உரங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. உழவர்கள் எளிதில் அணுகி, வேண்டிய இடுபொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள ஏதுவாக, **2025–2026ஆம் ஆண்டில் முதல் முறையாக நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்து இரகங்களின்**

**தரமான சான்று விதைகளும், பிற இடுபொருட்களும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் இருப்பு வைத்து உழவர்களுக்கு வழங்கப்படும்.**

**சர்க்கரைத்துறை**

**23. சர்க்கரை ஆலைகளுக்கு 2024-2025 அரவைப் பருவத்திற்கு கரும்பு வழங்கிய உழவர்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை**

தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடிப் பரப்பு, உற்பத்தியினை அதிகரித்து சர்க்கரை ஆலைகள் இயக்கத்திற்கு உறுதுணையாக இருக்கவும், **கரும்பு உழவர்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையிலும்,** 2024-2025 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கிய தகுதியுள்ள உழவர்களுக்கு, ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல், **முன் எப்போதும் இல்லாத அளவில், டன் ஒன்றுக்கு 349 ரூபாய், சிறப்பு ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் கரும்புக்கு, டன் ஒன்றிற்கு 3,500 ரூபாய் வழங்கப்பட்டு, சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கரும்பு உழவர்கள் பயன்பெறுவர். இதற்கென, 297 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**24. கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம்**

அதிக சர்க்கரைக் கட்டுமானம், பூச்சி, நோய்த் தாக்குதலுக்கு எதிர்ப்புப் பண்புகளைக் கொண்ட புதிய கரும்பு இரகங்களை உழவர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்திடவும், சாகுபடி செலவைக் குறைக்கும் விதமாக கரும்பு விதைக்கரணைகள், நாற்றுகள், இயந்திர அறுவடைக்கு ஏற்ற அகலப்பார் நடவு முறை, நுண்ணூட்ட உரக்கலவை, தோகை தூளாக்குதல், நிலப்போர்வை அமைத்தல் போன்ற இனங்களை கரும்பு உழவர்களுக்கு மானிய

விலையில் வழங்கவும் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து **10 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை**

25. **ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்**

மக்கள் நலமும், நல்வாழ்வும் அவர்கள் உண்ணும் உணவைப்பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், சிறுதானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் **"ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்னும் புதிய திட்டம் தமிழ்நாட்டில் 2025-2026ஆம் ஆண்டில் 125 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

i. **காய்கறிகள் விதைத்தொகுப்பு:** காய்கறிகள், பழங்களின் தினசரி தேவை சராசரியாக ஒரு நபருக்கு 400 கிராம் ஆகும். ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்திடவும், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத்தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற ஆறு வகையான **காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு 15 இலட்சம் குடும்பங்களுக்கு 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.**

ii. **பழச்செடிகள் தொகுப்பு:** நகர்ப்புரங்களிலும் கிராமப்புரங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய **பழச்செடித் தொகுப்புகள் ஒன்பது இலட்சம் குடும்பங்களுக்கு, 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.**

iii. தமிழ்நாட்டில், காய்கறிகளின் தேவைக்கேற்ப அவற்றின் பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தக்காளி, வெங்காயம், முருங்கை, கத்தரி, பச்சைமிளகாய், வெண்டை, கீரை போன்ற முக்கிய காய்கறிப்பயிர்கள் **14 ஆயிரம் ஏக்கரில் பரப்பு விரிவாக்கம்** செய்யப்படும். இந்தப் பரப்பு விரிவாக்கம் பெருமளவு சென்னைக்கு அருகிலுள்ள மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு சென்னைக்கான காய்கறித்தேவை நிறைவு செய்யப்படும்.

iv. வைட்டமின்கள், நார்ச்சத்துகள், இரும்புச்சத்து, தாது உப்புக்கள் போன்ற சத்துகள் நிறைந்த **பழங்களின் சாகுபடிப் பரப்பானது 12 ஆயிரம் ஏக்கரில் ஊக்குவிக்கப்படும்.**

v. பந்தல் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக **1,200 ஏக்கர் பரப்பில் பந்தல் அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.**

vi. பயறுவகை உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திட, 2025–26 ஆம் ஆண்டில், **பயறு பெருக்குத் திட்டம் 5 இலட்சத்து 72 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.**

vii. தமிழ்நாட்டில் துவரையின் பரப்பு குறைந்து கொண்டே வரும் நிலையில், கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு சீரிய முயற்சிகளால், துவரை பரப்பு, ஒரு இலட்சத்து 59 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. துவரை சாகுபடிப் பரப்பு குறைந்து வரும் மாவட்டங்களில், **80 ஆயிரம் ஏக்கர் பரப்பில், துவரையைத் தனிப்பயிராகவோ, வரப்புப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிடுவது ஊக்குவிக்கப்படும்.**

viii. **பயறு வகைகள் விதைத்தொகுப்பு: புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறுவகைகளை இல்லம்தோறும் வளர்க்கும் பொருட்டு பயறுவகை விதைகள் அடங்கிய தொகுப்பு ஒரு இலட்சம் இல்லங்களுக்கு 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.**

ix. புரதச்சத்து மிகுந்த காளான் உற்பத்தியை பெருக்குவதுடன், புதிய தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும், ஊரகப் பகுதிகளில் **ஐந்து காளான் உற்பத்திக்கூடங்கள் அமைத்திட மானியம் வழங்கப்படும்.**

x. உழவர்கள் தாங்கள் விளைவித்த காய் கனிகளை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்திட, **4,000 நடமாடும் விற்பனை வண்டிகளுக்கு மானியம் வழங்கப்படும்.**

## 26. ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித்திட்டம்

தமிழ்நாட்டில் **தென்னை 11 இலட்சத்து 65 ஆயிரம் ஏக்கரில்** பயிரிடப்படுகிறது. தென்னை மரங்களிலிருந்து **தேங்காய், இளநீர், தேங்காய் எண்ணெய், தேங்காய்ப்பால், நீராபானம், தென்னை**

**நார்** போன்றவையும் பல்வேறு வகையான மதிப்புக்கூட்டுப் பொருட்களும் கிடைக்கின்றன.

**"வைத்த பிள்ளையைப் பாதுகாத்தால், அது பெற்ற பிள்ளைக்கு உதவும்"** என்ற சிறப்பு வாய்ந்த தென்னை சாகுபடியை ஊக்குவிக்க உழவர்கள் விருப்பத்தின்படி நெட்டை, நெட்டை X குட்டை, குட்டை X நெட்டை ஒட்டு இரகக் கன்றுகள் வழங்கப்படும். **இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் ஒன்பதாயிரத்து 800 ஏக்கரில் செயல்படுத்த நான்கு கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேலும், தென்னந்தோப்புகளில் அடுக்குமுறை சாகுபடியில் **வாழை, ஜாதிக்காய், மிளகு போன்ற பலவகையான பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்து** ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வருவாய் ஈட்டும் வகையில் உழவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். **இத்திட்டம் எட்டாயிரம் ஏக்கரில், மூன்று கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

தென்னையின் உற்பத்தித்திறன், உற்பத்தியை அதிகரிக்க நோய்வாய்ப்பட்ட, விளைச்சல் இல்லாத, பழைய மற்றும் முதிர்ந்த மரங்களை அகற்றி, தரமான நாற்றுகளை மீண்டும் நடவு செய்ய ஊக்குவிக்கப்படும். இத்திட்டத்தில், **ஐந்தாயிரம் ஏக்கரில், மறு நடவு மற்றும் புத்தாக்கம் செய்வதற்கு எட்டு கோடியே 95 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தென்னை சாகுபடி செய்யும் உழவர்களின் வருமானத்தை மேம்படுத்த, ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் குறித்த செயல் விளக்கத்திடல்கள், **2,500 ஏக்கரில் அமைத்திட, ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

அண்மைக்காலமாக, **தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல், பெரும்பாலான இடங்களில் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தி, ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறையினை** உழவர்கள் கடைப்பிடித்திடும் வகையில், மஞ்சள் ஒட்டுப் பொறி, ஒட்டுண்ணி அட்டைகள் போன்ற இனங்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டம் 2025–26ஆம் ஆண்டில் **ஒரு இலட்சத்து 68 ஆயிரம் ஏக்கரில், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். இதற்கென 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேலும், ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதில் **அபர்டோகிரைசா** இரை விழுங்கியும், **என்கார்சியா** ஒட்டுண்ணியும் பெரும் பங்கு வகிப்பதால் தென்னை பயிரிடப்படும் 21 மாவட்டங்களில் இப்பூச்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் **ஆழியார் நகர், திருப்பதிசாரம், பையூர், தஞ்சாவூர் ஆராய்ச்சி நிலையங்களில் ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள் அமைத்திட, நான்கு கோடியே 46 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் சுமார் ஐந்து இலட்சம் தென்னை உழவர்கள் பயனடைவர்.**

**ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித்திட்டம் மொத்தம் 35 கோடியே 26 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

## 27. கோடைக்காலப் பயிர்த் திட்டம்

கோடைக்காலமான ஏப்ரல், மே மாதங்களில் அதிக வெப்பம், குறைவான மழை போன்றவற்றால் சாகுபடிப் பரப்பு குறைந்து, காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற வேளாண் விளைபொருட்களின்

சந்தை விலை அதிகரிக்கிறது. எனவே, கோடைக்காலத்தில், குறைந்த நீர்த்தேவையுள்ள, குறுகிய காலப் பயறுவகைகள் 71 ஆயிரத்து 600 ஏக்கரிலும், எண்ணெய்வித்துகளான நிலக்கடலை 74 ஆயிரம் ஏக்கரிலும், எள் 33 ஆயிரத்து 300 ஏக்கரிலும், தக்காளி, வெண்டை, வெங்காயம், கத்தரி, மிளகாய், கீரைகள் போன்ற **முக்கிய காய்கறிப்பயிர்கள் 57 ஆயிரத்து 300 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும். இதனால் உழவர்களுக்கு உரிய விலை கிடைப்பதுடன், நுகர்வோருக்கு நியாயமான விலையில் காய்கறிகள் கிடைக்கும். இதற்கென, 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**28.நுண்ணீர்ப் பாசனத் திட்டம்**

நீர் ஆதாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தி, நீர்ப் பயன்பாட்டுத் திறனை 40 முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்க, சொட்டு நீர், தெளிப்பு நீர்ப் பாசனங்களை உள்ளடக்கிய நுண்ணீர்ப் பாசனத் திட்டம் ஊக்குவிக்கப்படும். இதன் மூலம் உரப்பயன்பாட்டுத்திறன் அதிகரிக்கப்பட்டு, உரங்கள் வீணாவது தடுக்கப்படுவதோடு, களைகள் கட்டுப்படுத்தப்பட்டு, பணியாட்களின் தேவையும் கணிசமாகக் குறைந்து, உற்பத்தி அதிகரிக்கிறது. **2025–2026 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் ஏக்கரில், ஆயிரத்து 168 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் நுண்ணீப்பாசன அமைப்புகள் நிறுவப்படும்.**

**29.பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி ஊக்குவிப்பு**

பாரம்பரிய காய்கறிகளை உண்பதன் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு, **உழவர்கள் பாரம்பரிய காய்கறி இரகங்களைப் பெரும்பான்மையாகச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் வகையில், சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்தில்

மணப்பாறைக் கத்தரி, சில்லுக்கொடி கத்தரி, குலசை கத்தரி, பெரிய கொல்லம்பட்டிக் கத்தரி, தருவைத் தக்காளி, மஞ்சள் குடம் தக்காளி, ஆனைக்கொம்பன் வெண்டை, சிவப்பு வெண்டை, சிறகு அவரை, மூக்குத்தி அவரை போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய காய்கறி இரகங்களைச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்க **இரண்டு கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 2,500 ஏக்கரில் பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி செய்யும் 7,000 உழவர்கள் பயனடைவார்கள்.**

30. **அறுவடைப் பின்செய் மேலாண்மை ஊக்குவிப்பு**

அக்டோபர்–டிசம்பர் மாதங்களில் வெங்காயத்தின் உற்பத்தி குறைவதால், வெங்காயத்தின் விலை அதிகமாக உள்ளது. இந்த இடைவெளியைக் குறைப்பதற்காக, வெங்காயத்தினைச் சேமித்து வைத்து மகசூல் குறையும் நேரங்களில் விற்பனை செய்வதற்காக 36,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட **வெங்காய சேமிப்புக்கூடங்கள் அமைக்க மானியம் வழங்க, 18 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** இத்திட்டத்தில் ஆயிரம் உழவர்கள் பயனடைவர்.

31. **தினசரி வருமானம் ஈட்ட மலர்கள் சாகுபடி**

i. காய்கறிகள், பழங்கள் சாகுபடி போலவே ஆண்டு முழுவதும் சீரானவருவாய்கொடுப்பதுமலர்சாகுபடி.தினசரிமலர்களைப் பறித்து விற்பனை செய்வதன் மூலம், நிலையான தொடர் வருவாய் ஈட்ட முடியும். இதனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, **மலர்கள் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு மானியம் வழங்க எட்டு கோடியே 51 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 6,200 ஏக்கரில் மலர்கள் சாகுபடி செய்யும் சுமார் 9,000 உழவர்கள் பயன்பெறுவார்கள்.

ii. **மல்லிகைக்கான சிறப்புத் திட்டம்** : பாரம்பரிய மலர்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த மல்லிகை மலரானது தமிழ்ப் பண்பாட்டில் சங்க காலத்திலிருந்தே தனக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ளது. **"மதுரைக்கு மற்றுமோர் முகவரி தந்த மல்லிகை"** தமிழ்நாட்டில் 42,000 ஏக்கரில் பயிரிடப்பட்டு இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மதுரை, தருமபுரி, திருவள்ளூர், சேலம், திண்டுக்கல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. மல்லிகை மலர் பெரும்பாலும் பூக்களாக விற்பனை செய்யப்படுகிறது. மல்லிகை, ஜாதிமல்லி ஆகியவை வாசனை எண்ணெய் பிரித்தெடுப்பதற்காகப் பயிரிடப்பட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**தமிழ்நாட்டில் 2025–2026ஆம் ஆண்டில் 3,000 ஏக்கரில், ஒரு கோடியே 60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஏழாயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் மல்லிகை சாகுபடி ஊக்குவிக்கப்படும்.**

iii. **நறுமண ரோஜாவிற்கான சிறப்புத் திட்டம்:** தமிழ்நாட்டில் ரோஜா மலர்கள் 9,600 ஏக்கரில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம், திண்டுக்கல், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. **ரோஜா மலர் சாகுபடியினை ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**32. சுவைதாளிதப் பயிர்களுக்கான சிறப்புத் திட்டம்**

பண்டையக் காலம் முதல் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையோடு நறுமணப் பொருட்களின் பயன்பாடு, தொடர்ந்து வருகின்றது. இப்பொருட்கள் உணவிற்குச் சுவையூட்டுவதுடன்,

மணமூட்டும் பொருட்களாகவும், மருத்துவப் பயன்கள் கொண்டதாகவும் விளங்குகின்றன. இத்தகைய சிறப்பு மிக்க **மிளகு,கொத்தமல்லி,மிளகாய்,ஜாதிக்காய்,கிராம்பு,பட்டை,பூண்டு, இஞ்சி, மஞ்சள் போன்ற சுவைதாளிதப் பயிர்களின் சாகுபடியும், இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில், 2,500 ஏக்கரில் சீமைக்கருவேல மரங்களை அகற்றி, மிளகாய் சாகுபடி செய்வதும் ஊக்குவிக்கப்படும். இதற்கென 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 17,500 ஏக்கரில் சுவைதாளிதப் பயிர்கள் சாகுபடி செய்யும் 23 ஆயிரம் உழவர்கள் பயன்பெறுவார்கள்.**

### 33. தமிழ்நாடு முந்திரி வாரியம்

தமிழ்நாட்டில் அரியலூர், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் தேனி மாவட்டங்களில் முந்திரி அதிகமாக பயிரிடப்படுகிறது. முந்திரி தமிழ்நாட்டில் இரண்டு இலட்சத்து ஒன்பது ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு ஆண்டிற்கு 43 ஆயிரத்து 460 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது

இந்தியாவில், தமிழ்நாடு முந்திரி உற்பத்தியில் நான்காவது இடத்தில் இருந்தாலும் ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. எனவே, **முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரி சார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கவும், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாடு முந்திரி வாரியம் (Tamil Nadu Cashew Board) ஏற்படுத்தப்படும்.** இதனால் முந்திரி சாகுபடி செய்யும் உழவர்களும், அதனைச் சார்ந்த தொழில் செய்யும் கிராமப்புர மக்களும் அதிகளவில் பயனடைவார்கள்.

34. **பனை மேம்பாட்டு இயக்கம்**

**" நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்"**

என நாரை விடு தூது பாடலில் பனை பற்றிய குறிப்பு பாங்குற அமைந்துள்ளது.

நமது மாநில மரமான பனை மரம், தமிழர்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மைக்கு உதவும்,முக்கியத்துவம்வாய்ந்த,பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு நான்கு ஆண்டுகளாகப் பனை மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2025–2026 ஆம் ஆண்டில் பனை சாகுபடியை ஊக்குவிக்க 10 இலட்சம் பனை விதைகள், பனை மதிப்புக்கூட்டுப் பொருள் தயாரிக்கும் கூடங்கள், மதிப்புக்கூட்டுதல் பயிற்சி ஆகிய இனங்களுக்கு, பனை மேம்பாட்டு இயக்கத்தில் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 20 ஆயிரம் நபர்கள் பயனடைவார்கள்.**

35. **பலா மேம்பாட்டு இயக்கம்.**

**"முன்றில் பலவின் படுசுளை மரீஇப்**
**புன்தலை மந்தி துர்ப்ப"**

**என வீட்டு முற்றத்தில் பழந்தமிழர் வளர்த்த பலா மரத்தினைப் பற்றிய குறிப்பு நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.**

2023–24 மற்றும் 2024–25 ஆம் ஆண்டுகளில், பலாவிற்குச் சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டு, பரப்பு விரிவாக்கம், ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி மேலாண்மை, சிறிய

அளவிலான பலா பதப்படுத்தப்படும் அமைப்பு, பலா சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான பயிற்சி ஆகியவற்றிக்கு மானியம் வழங்கிட மூன்று கோடியே 71 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம், இதுவரை 2,876 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். **2025–26 ஆம் ஆண்டில் புதிய இரக பலா சாகுபடி பரவலாக்கம், பலாவில் ஊடுபயிர் சாகுபடி போன்ற திட்டகூறுகள் ஊக்குவிக்கப்படும். இதற்கென 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

36. **வெண்ணெய்ப்பழம் (Avocado) சாகுபடியினை ஊக்குவித்தல்**

அண்மைக் காலங்களில் ஊட்டச்சத்துள்ள வெண்ணெய்ப்பழத்தின் (Avocado) தேவை அதிகரித்து வருகிறது. மேலும் வெண்ணெய்ப்பழ மரங்கள் வேகமாக வளரக்கூடியதாகவும், கரியமில வாயுவை அதிகமாக உறிஞ்சக்கூடியதாகவும் உள்ளன. இத்தகைய, சுற்றுப்புறச்சூழலுக்கு நன்மை பயக்கும் வெண்ணெய்ப்பழ சாகுபடியினை 500 ஏக்கரில் தென்காசி, திண்டுக்கல், தேனி, கள்ளக்குறிச்சி, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ள **69 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## வேளாண்மைப் பொறியியல் துறை

37. **வேளாண் இயந்திரமயமாக்குதல்**

**" மணப்பாற மாடுகட்டி மாயவரம் ஏறு பூட்டி**
**வயக்காட்ட உழுது போடு சின்னக் கண்ணு"**

என்று இருந்த நிலை மாறி உயிர்காக்கும் உழவுத்தொழிலிலும், இயந்திரங்களின் தேவை அதிகரித்துவிட்டது.

வேளாண்பணிகள் தொழிலாளர்கள் பற்றாக்குறையினால் நலிவுறாமல் குறித்த காலத்தில், செவ்வனே நடைபெற்று

குறைந்த செலவில், அதிக மகசூல் பெறுவதில் வேளாண் இயந்திரமயமாக்குதல் பெரும் பங்காற்றுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், சூரியக்கூடார உலர்த்திகள் போன்றவை உழவர்கள் பயனடையும் வகையில் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் விலையில் 50 சதவீதம், இதர உழவர்களுக்கு 40 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

சிறிய வகையிலான நெல் நாற்றுநடும் இயந்திரத்தின் அதிகபட்ச மானியமானது, ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயாகவும், விசைக் களையெடுக்கும் கருவியின் அதிகபட்ச மானியமானது, 63 ஆயிரம் ரூபாயிலிருந்து 85 ஆயிரம் ரூபாயாகவும், உயர்த்தி வழங்கப்படும். மேலும், **சிறு, குறு உழவர்கள், சிறிய நிலப்பரப்பில் வேளாண் பணிகளை, தாங்களே மேற்கொள்ள உதவிடும் வகையில், உழவர்களுக்கு 7,900 பவர்டில்லர்கள், 6,000 விசை களையெடுப்பான்கள் மானியத்தில் வழங்கப்படும்.**

**இத்திட்டத்தில், வருகின்ற 2025-26 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 2,338 கிராமங்களில் 5,000 வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.**

நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், விசைக் களையெடுப்பான் ஆகியவற்றினை வாங்கிட, சிறு, குறு உழவர்களுக்கு நடைமுறையிலுள்ள 50 சதவீத மானியத்துடன்,

கூடுதலாக 10 சதவீதம் சேர்த்து, 60 சதவீதம் மானியம் வழங்கப்படும். இதற்கென, மாநில நிதியிலிருந்து ரூபாய் ஐந்து கோடி ஒதுக்கீடு செய்யப்படும்

**வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தில், 2025-26 ஆம் ஆண்டில் 17 ஆயிரம் உழவர்கள் பயனடையும் வகையில் 215 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

38. **பயிர் சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள்**

சிறு, குறு உழவர்கள் வாங்க இயலாத, அதிக திறன், உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்களைக் கொண்ட வாடகை மையங்களை விவசாய கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், ஊரகத் தொழில்முனைவோர்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் அமைப்பதன் வாயிலாக, உழவர்கள் குறைந்த வாடகையில் தேவையான இயந்திரங்களைப் பெற்று பயன்பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படும். இதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், சாகுபடிச் செலவினைக் குறைக்கவும் இயலும். **இவ்வகையில், 130 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூபாய் 10 கோடியே 50 இலட்சம் மானியத்தில் அமைக்கப்படும்.**

39. **வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகைத் திட்டத்தினை வலுப்படுத்துதல்**

இ-வாடகை ஆன்லைன் செயலி மூலமாக உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறைக்குத் தீர்வுகாணும் விதமாக உழவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டத்தினை வலுப்படுத்திட **டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய கருவிகள் உள்ளிட்ட 603 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல்**

**செய்யப்பட்டு இ–வாடகை செயலியின் மூலம் தேவைப்படும் உழவர்களுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்படும். இதற்கென 17 கோடியே 37 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 40. கடைமடை உழவர்களுக்கும் தடையற்ற பாசனநீர்

பாசனநீரைத் தங்கு தடையின்றிக் கொண்டு செல்லவும், மழைக்காலங்களில் பெரும்பாலான மழைநீர் வயல்களில் நிரம்பி பயிர் சேதம் ஏற்படுவதைத் தடுக்கவும்,கடைமடை உழவர்களுக்குப் போதுமான நீர் உரிய நேரத்தில் சென்றடையவும், கடந்த மூன்று ஆண்டுகளாக 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளின் முக்கியத்துவம் கருதி 2025–26ஆம் ஆண்டிலும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சி மாவட்டங்களில் காவேரி, வெண்ணாறு, வெள்ளாறு வடிநிலப்பகுதிகளிலும், கல்லணை கால்வாய்ப்பாசனப் பகுதிகளிலும் உள்ள **"சி" மற்றும் "டி" பிரிவு வாய்க்கால்களில் 2,925 கிலோ மீட்டர் நீளத்திற்கு 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு "ஆறோடும் மண்ணில் எங்கும் நீரோடும்" நிலை ஏற்படுத்தப்படும்.**

### 41. முதலமைச்சரின் சூரியசக்தி பம்புசெட்டுகள் திட்டம்

**"வான மெங்கும் பரிதியின் சோதி;**
**மலைகள் மீதும் பரிதியின் சோதி;"**

என மகாகவி பாரதியின் பாடலில் தரணியெங்கும் ததும்பியுள்ள தனது ஒளியால், சூரியன் உலகத்தினை வாழ்விக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளதைப் போலவே, விவசாயத்திலும் சூரிய ஆற்றல் புதிய வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. உழவர்களுக்குப்

பாசனத்திற்கான ஆற்றலினை வழங்குவதன் மூலம், அவர்களின் வருமானத்தை அதிகரித்திடவும், விவசாயத்தில், மரபுசார் ஆற்றல் உபயோகத்தைக் குறைத்திடவும், நீடித்த நிலையான புதுப்பிக்கத்தக்க ஆற்றலைக் கொண்டு, வேளாண்மையில் நீர்ப்பாசனம் செய்யும் நோக்கில், மின்சார இணைப்பு இல்லாத உழவர்களுக்கு, தனித்து, சூரியசக்தியால் இயங்கக்கூடிய பம்புசெட்டுகள் மானியத்தில் அமைத்துத் தரப்படும்.

**இத்திட்டத்தில், 2025–26ஆம் ஆண்டில் 1,000 உழவர்கள் பயனடையும் வகையில் சூரியசக்தி பம்புசெட்டுகள் சிறு, குறு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் உழவர்களுக்கு 70 சதவீத மானியத்திலும், இதர உழவர்களுக்கு 60 சதவீத மானியத்திலும் ரூபாய் 24 கோடி செலவில் அமைத்துத் தரப்படும்.**

### 42. உழவர்களுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள் வழங்குதல்

கிணறு அமைத்து மின் வசதி பெற்ற உழவர்கள், மானியத்தில் புதிய திறன்மிகு மின்மோட்டார் பம்புசெட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றிடவும் 1,000 உழவர்கள் பயனடையும் வகையில், மின்மோட்டார் பம்புசெட்டின் விலையில் 50 சதவீதம் மானியம் அதிகபட்சமாக **15 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும். இதற்காக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 43. மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அமைத்தலும், பராமரித்தலும்

வேளாண்மைப் பொறியியல் துறை இயந்திரங்களைப் பயன்படுத்தி, விவசாயத்திற்குத் தேவைப்படும் நீர்ப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு,

மழைநீரைச் சேகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கவும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில், நீரோட்டத்துக்குத் தடையாக இருக்கும் மண், புதர்களை அகற்றித் தூர்வாரும் பணிகள், 500 கட்டமைப்புகளில் மேற்கொள்ளுதல், 100 புதிய மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்குதல் ஆகிய பணிகள் மொத்தம் இரண்டு கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 44. பயிர் சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல்

வேளாண் பயிர் சாகுபடியில், சில வேளாண் பணிகளில் மட்டுமே இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால், சாகுபடி செலவு அதிகரிப்பதுடன், பணிகளை முடிக்க கூடுதல் காலமும் தேவைப்படுகிறது. எனவே, **உழவர்களின் வருமானத்தை அதிகரிக்க, பயிர் சாகுபடியில் உழவு, விதைப்பு, களையெடுத்தல், பயிர்ப்பாதுகாப்பு, அறுவடை, பயிர்க்கழிவு மேலாண்மை ஆகிய அனைத்து வேளாண் பணிகளிலும் இயந்திரமயமாக்குதலைக் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.**

**நெல், மக்காச்சோளம், வாழை, நிலக்கடலை, உளுந்து ஆகிய பயிர்களுக்குரிய சாகுபடியில் இயந்திரமயமாக்குதலைக் கடைப்பிடித்திடும் பொருட்டு, உழவர்களின் நிலங்களில் 1,550 ஏக்கர் பரப்பளவில்** 'வேளாண் தொழில்நுட்ப முனைவோர்' மூலம் வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை–உழவர் நலத்துறையின் சகோதரத்துறைகளுடன் இணைந்து உழவர்களுக்குச் **செயல் விளக்கங்கள் காண்பிக்கப்படும்.** இந்த செயல் விளக்கங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள உழவர்கள் நேரில் கண்டு பயனடையும் வகையில் 'அட்மா' திட்ட ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படும்.

**இச்செயல்விளக்கங்களை மேற்கொள்ள மூன்று கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**45. திறந்த வெளி பாசனக் கிணறுகளைப் புனரமைத்தல்**

நிலத்தடிநீர்ப் பாசனத்தின் முக்கியக் கட்டமைப்பான திறந்தவெளி பாசனக் கிணறுகளில், பெரும்பாலானவை சுற்றுச்சுவர் இல்லாமல் அல்லது சுற்றுச்சுவர் சேதமடைந்து, முறையான பராமரிப்பு இல்லாமல் தூர்ந்து போய், செயல்திறன் இழப்பு ஏற்படுவதுடன் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு திறந்த வெளிக் கிணறுகளுக்குச் சுற்றுச்சுவர், நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு ஏற்படுத்திட 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் மொத்தம் இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 100 திறந்தவெளி கிணறுகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**46. மண் அள்ளும் இயந்திரம், டிராக்டர், டிரோன், அறுவடை இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

கிராமப்புர இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சியினை அளித்து, தேவையான திறன்களை வழங்கிடும் வகையில், 120 கிராமப்புர இளைஞர்களுக்கு மண் அள்ளும் இயந்திரம், டிராக்டர், டிரோன், அறுவடை இயந்திரங்களுக்கான ஓட்டுநர் பயிற்சியும், 180 கிராமப்புர இளைஞர்களுக்கு, வேளாண் இயந்திரங்கள் செயல்விளக்கப் பயிற்சியும் ஆக மொத்தம் **300 கிராமப்புர இளைஞர்கள் பயனடையும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்படும்.** ஓட்டுநர் பயிற்சியினைச் சிறப்பாக வழங்கிட, தேவையான பாவனை சாதனங்கள் (Simulator) அரசு இயந்திரக் கலப்பைப்

பணிமனைகளில் ஏற்படுத்தப்படும். **இதற்கென ஒரு கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத்துறை**

வேளாண் விளைபொருட்கள் உற்பத்தி அதிகரிப்பு நடவடிக்கைகளுடன், உழவர்கள் நலன் கருதி அவர்களுக்கு உரிய விலை கிடைத்திட, அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்தல், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள், பண்ணைவழி வர்த்தகம், மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், ஏற்றுமதி, தரக்குறியீடு பெறுதல், இணையவழி வர்த்தகம்,புத்தாக்க நிறுவனங்களை ஊக்குவித்தல், திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள், வேளாண் கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

47. **வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக்கூட்டும் அலகுகள் அமைக்கும் சிறப்புத் திட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2030ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டினை ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றவேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளார்கள்.** இதை அடைவதில்,வேளாண் பொருட்களின் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல் இன்றியமையாதது ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் பொருட்களின் மதிப்புக்கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். 10 கோடி ரூபாய் வரையிலான புதிய திட்டங்களுக்கு முதலீட்டு மானியம் 25 சதவீதமும், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கூடுதலாக

10 சதவீதம் அதாவது 35 சதவீதம் என அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இது தவிர 5 சதவீத வட்டி மானியம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மகசூல் காலங்களில் வேளாண் விளைபொருட்கள் விலை வீழ்ச்சி அடையும்போது விளைபொருட்களை வீணாகாமல் சேமித்து, மதிப்புக்கூட்டி, உழவர்கள் நலன் பாதுகாக்கப்படுவதுடன், தக்காளி, மிளகாய், சின்னவெங்காயம், முருங்கை, மஞ்சள், வாழை, மா, மல்லிகை, சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி, உள்ளிட்ட பல்வேறு வேளாண் விளைபொருட்களுக்குத் தகுந்த மதிப்புக்கூட்டுதல் அலகுகள் அமைக்க வழிவகுக்கப்படும். **இவ்வாறான 100 திட்டங்களுக்கு முதற்கட்டமாக இவ்வாண்டில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

48. **ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.**

i. 50 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒன்றிய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன், சேலம் மாவட்டம் கொளத்தூர், தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி, கரூர் மாவட்டம் சின்னதாராபுரம், விருதுநகர் மாவட்டம் வத்ராயிருப்பு மற்றும் திருவில்லிபுத்தூர், பெரம்பலூர் மாவட்டம் பூலாம்பாடி, திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி மற்றும் தொட்டியம், இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி, வேலூர் மாவட்டம் காட்பாடி ஆகிய இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு பரிவர்த்தனைக் கூடங்கள், சேமிப்புக் கிடங்குகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் G. அரியூர் துணை ஒழுங்குமுறை

விற்பனைக்கூடத்தில் பரிவர்த்தனைக்கூடம் ஆகியன அமைக்கப்படும்.

ii. மேலும், **"பொறுத்து விற்பது பொருளைக் கூட்டும்"** என்ற பழமொழிக்கேற்ப, அறுவடைக் காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து உழவர்களைப் பாதுகாக்கவும், கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்று மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (e–Negotiable Warehouse Receipt) முறையில் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளில் கடன் பெறும் வசதியை ஊக்குவிக்க, தொடுவட்டி, திங்கள் சந்தை, திண்டிவனம், செஞ்சி, சூலூர், கும்பகோணம், உடுமலைப்பேட்டை, கீழ்பெண்ணாத்தூர், உசிலம்பட்டி **ஆகிய ஒன்பது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தலா 1,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**49. மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஒருங்கிணைத்தல்**

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், 157 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) ஒருங்கிணைக்கப்பட்டு, வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2025–26 ஆம் ஆண்டில் மேலும் 56 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) ஒருங்கிணைக்கப்படும். இதனால் உழவர்கள் தேசிய அளவில் வர்த்தகம் மேற்கொண்டு கூடுதல் வருமானம் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

**50. உழவர் சந்தைகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்.**

உழவர்கள், நுகர்வோர்களின் நலன் கருதி, அதிக வரத்துள்ள **50 உழவர் சந்தைகள்** தேர்ந்தெடுக்கப்பட்டு கூடுதல் கடைகள், குடிநீர், கழிப்பறை வசதிகள், கடைகள் புனரமைத்தல், தரைதளம் மற்றும் கூரைகள் சீர்படுத்துதல், நடைபாதை வசதிகள் போன்ற பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புகள் **எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**51. இணைய வர்த்தகம் வாயிலாக உழவர் சந்தை காய்கறிகள் நுகர்வோர் இல்லத்திற்கே விநியோகம்**

உழவர் சந்தைகளின் செயல்பாட்டினை அதிகரித்து, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில், **பசுமைக்காய்கறிகளை நுகர்வோர் தங்கள் இல்லத்திலேயே நேரடியாக பெற்றுக்கொள்ள ஏதுவாக, மாவட்டத் தலைமையிடங்களுக்கு அருகிலுள்ள உழவர் சந்தைகள் உள்ளூர் இணைய வர்த்தகத் தளத்துடன் (Local Online Sale Platform) இணைக்கப்படும்.** முதற்கட்டமாக தமிழ்நாட்டிலுள்ள 20 உழவர் சந்தைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**52. வட்டாரங்கள் தோறும் தேர்வு செய்யப்பட்ட பொது சேகரிப்பு மையங்களில் வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம்**

அறுவடைக் காலங்களில் அதிக வரத்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரத்தினை ஒழுங்குபடுத்திடவும், வேளாண் விளைபொருள்களை எளிதில் சந்தைப்படுத்திட ஏதுவாகவும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் நீட்சியாக, **வட்டாரம்தோறும் பொது சேகரிப்பு மையங்கள் தேர்வு செய்யப்பட்டு, வர்த்தகம் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.**

**53. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குப் பொருளீட்டுக் கடன்**

அறுவடைக்காலங்களில் வேளாண் விளைபொருட்களின் அதிக வரத்தால், ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து உழவர்களைப் பாதுகாக்கும் விதமாக, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வேளாண் விளைபொருட்களை இருப்பு வைக்கும் உழவர்களுக்கும், வணிகர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் பொருளீட்டுக் கடன் வசதியானது **உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் (FPO) விரிவுபடுத்தப்பட்டு, பத்து இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.**

**54. வேளாண் விளைபொருட்களுக்கு தனித்துவப் புவிசார் குறியீடு**

தனித்துவ அடையாளமான புவிசார் குறியீட்டுடன் கூடிய வேளாண் விளைபொருட்கள் உலக அளவில் பெரும்பாலான மக்களால் அறியப்படுவதால், அவற்றின் சந்தைத்தேவை அதிகரிப்பதுடன், ஏற்றுமதிக்கான வாய்ப்பும் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில், கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை வேளாண்மை–உழவர் நலத்துறையின் மூலம் 35 வேளாண் விளைபொருட்களுக்கு தனித்துவமான புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதன் மகத்துவம் அறிந்து, **2025–26ஆம் ஆண்டில் நல்லூர் வரகு (கடலூர்), வேதாரண்யம் முல்லை (நாகப்பட்டினம்), நத்தம் புளி (திண்டுக்கல்), ஆயக்குடி கொய்யா (திண்டுக்கல்), கப்பல்பட்டி கரும்பு முருங்கை (திண்டுக்கல்) ஆகிய ஐந்து வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை**

55. **நீர்வடிப்பகுதி மேம்பாடு**

நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் பெரம்பலூர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களில், ஒரு இலட்சத்து முப்பதாயிரம் எக்டர் பரப்பில் 275 நீர்வடிப்பகுதிகளில் 286 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2021–2022 முதல் 2025–2026 வரை ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

2025–2026 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் மேலும், 30,910 எக்டர் பரப்பில் 68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 53 நீர்வடிப்பகுதிகளில் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், பண்ணைக்குட்டைகள், கிராம நீர் வரத்து வாய்க்கால்கள் மற்றும் ஊருணிகளைத் தூர் வாருதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு இக்கிராமங்களின், நீர்வளத்தைப் பெருக்கவும், தோட்டக்கலைப் பயிர்கள், பண்ணைக்காடுகள் அமைக்கவும் உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

56. **தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வேளாண்மைக்கான (Climate Resilient Agriculture) சிறப்பு முயற்சிகள்**

கடந்த வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்திட சிறப்பு வேளாண்

கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தற்போது 2030 மற்றும் 2050 ஆம் ஆண்டுகளில் காலநிலை மாற்றங்களால் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஏற்படப்போகும் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்காக **காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைத் தாங்கி அதிக விளைச்சல் தரக்கூடிய பயிர் இரகங்கள் மற்றும் அதிக இலாபம் தரக்கூடிய மாற்றுப்பயிர்கள், உணரி (sensor) சார்ந்த நீர் மற்றும் உர மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன.**

**இத்தொழில்நுட்பங்களை உழவர்களிடையே பரவலாக்கம் செய்திட வட்டாரத்திற்கு ஒரு கிராமத்தில் மாதிரிப் பண்ணைகள் அமைத்துச் செயல் விளக்கம் அளிக்கப்படும்.** இதற்கென ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 57. உயிர்ம வேளாண் விளைபொருட்களுக்குத் தர நிர்ணய ஆய்வகங்கள் அமைத்தல்

உயிர்ம வேளாண்மை மூலம் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய நெல், காய்கறிகள் மற்றும் நறுமணப்பயிர்களை அதிக விலைக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்வதற்குத் தரநிர்ணயம் அவசியம். இதனை உழவர்களுக்கு நியாயமான கட்டணத்தில் கொண்டு சேர்க்கும் வகையில் **சென்னை, தூத்துக்குடி, கோவை, மதுரை ஆகிய நான்கு இடங்களில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மையங்களில் உயிர்ம வேளாண் விளைபொருள் தரநிர்ணய ஆய்வகங்கள் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.** இதன் மூலம் உழவர்கள் தங்கள் விளைபொருட்களை ஆய்வு செய்து அதன் மூலம் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்து, கூடுதல் இலாபம் ஈட்ட வழி வகை செய்யப்படும்.

58. **வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்காக "டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி"**

அண்மைக்காலங்களில் மக்கள்தொகைப் பெருக்கம், காலநிலை மாற்றம், வேளாண் தொழிலாளர் மற்றும் இயந்திரப் பற்றாக்குறை, பூச்சி, நோய்த்தாக்குதல், வேளாண் பொருள்களின் நிலையற்ற விலை போன்ற காரணங்களினால் வேளாண்மையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இவற்றிற்கு, புதுமையான சிந்தனை மற்றும் நவீன ஆராய்ச்சி முறைகளைக் கொண்டு விரைந்து தீர்வு காண்பது அவசியமானதாகும். எனவே, **பல்வேறு விதமான முக்கிய சவால்களை வரிசைப்படுத்தி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே வேளாண் நிரல் திருவிழா (Agri–Hackathon) மூலம் தகுதியான தொழில்நுட்பங்களைத் தேர்வு செய்து** அவர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் (mentoring) மற்றும் நிதி உதவி (grant) வழங்கப்படும். **இதற்கென, வேளாண் விஞ்ஞானி "டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்" அவர்களது பெயரில் ஆராய்ச்சி நிதியாக 2025–26ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

59. **தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx)**

i. **தாவரம் சார்ந்த புரத உற்பத்தித் தொகுப்பு**

தாவரப் புரதங்களுக்கு பன்னாட்டு சந்தையில் உள்ள தேவையினைக் கருத்தில் கொண்டு, எண்ணெய் நீக்கப்பட்ட அரிசித் தவிடு, நிலக்கடலைப் புண்ணாக்கு மற்றும் எள்ளுப்புண்ணாக்கு ஆகியவற்றிலிருந்து புரதத்தை உற்பத்தி செய்வதற்காக, **தாவர அடிப்படையிலான புரத உற்பத்தித்**

**தொகுப்பு உருவாக்க வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இதற்கென மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

ii. **வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதித் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்.**

வேளாண் விளைபொருட்கள், மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட விரும்பும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், உணவுத் தயாரிப்பு வணிக அமைப்புகள், தனிநபர்கள் ஆகியோர் உள்ளடக்கிய **500 பயனாளிகளுக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சி வழங்கப்படும்.**

60. **கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு**

**கூட்டுறவு**

i. தமிழ்நாட்டில் பயிர் சாகுபடிக்கான குறுகியகால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு **2025-2026 ஆம் ஆண்டில் 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க்கடன் வழங்கப்படும்.**

ii. கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான **உழவர்களின் குறுகியகாலக் கடன் தேவைகளுக்கு 2025-2026 ஆம் ஆண்டில் மூன்றாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மூலதனக் கடன் வழங்கப்படும்.**

iii. விவசாய நிலமற்ற பட்டியல் இனத்தவருக்கு வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வாங்க மற்றும் பராமரித்திட கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயம் சார்ந்த மத்திய காலக் கடன்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு மூலதனக் கடன்கள் வழங்கப்படும்.

iv. 2021–22–ஆம் நிதியாண்டு முதல் நடப்பு நிதியாண்டில் 11.03.2025 வரை 67 இலட்சத்து 81 ஆயிரம் விவசாயிகளுக்கு 54,800 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க்கடனும், 12 இலட்சத்து 24,000 நபர்களுக்கு 6,588 கோடியே 16 இலட்சம் ரூபாய் அளவிற்கு கால்நடை பராமரிப்புக் கடனும் வழங்கப்பட்டுள்ளன. 2021–22–ஆம் நிதியாண்டு முதல் வட்டி மானியம் மற்றும் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தியதற்கான வட்டி ஊக்கத்தொகை 2,162 கோடியே 84 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. 2025–26 **ஆம் ஆண்டில் வட்டி மானியத்திற்கென 853 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

v. கடந்த 2021–ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட விவசாய பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு, மொத்த பயிர்க் கடன் தள்ளுபடியான 12,110 கோடியே 74 இலட்சம் ரூபாயில், தற்போதுவரை, தள்ளுபடித்தொகையாக 10,336 கோடியே 40 இலட்சம் ரூபாயும், தள்ளுபடித்தொகை மீதான வட்டியாக 1,811 கோடியே 90 இலட்சம் ரூபாயும் தமிழ்நாடு அரசால் விடுவிக்கப்பட்டுள்ளன. **2025–26 ஆம் ஆண்டில் பயிர்க்கடன் தள்ளுபடிக்கென 1,477 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**

**அ) நெல் கொள்முதல் ஊக்கத்தொகை**

விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும் நெல்லிற்கு, தமிழ்நாடு அரசால் சன்ன இரகம் மெட்ரிக் டன் ஒன்றுக்கு 1,300 ரூபாயும் பொது இரகம் நெல் மெட்ரிக் டன்

ஒன்றுக்கு 1,050 ரூபாயும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. நடப்பு கொள்முதல் பருவம் KMS 2024–2025 இல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், 11.03.2025 வரை, மூன்று இலட்சத்து 24 ஆயிரம் விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக, மொத்தம் 24 இலட்சத்து 7 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 297 கோடி ரூபாய், நேரடியாக விவசாயிகள் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. **2025–26 ஆம் ஆண்டில் நெல் ஊக்கத்தொகை வழங்கிட, 525 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ஆ) நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்:**

தமிழ்நாடு அரசால் கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகளை இயற்கைப் பேரிடர்களில் இருந்து பாதுகாத்திட ***"ஒரு நெல் மணி கூட வீணாகக் கூடாது"*** **என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**

i. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், உள்ளிட்ட **டெல்டா மாவட்டங்களில்,** இரண்டு இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூறை அமைப்புடன் கூடிய 22 **நவீன நெல் சேமிப்பு வளாகங்களும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு** ஆகிய மாவட்டங்களில் 49 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூறை அமைப்புடன் கூடிய 6 **நவீன நெல் சேமிப்பு வளாகங்களும் ஏற்படுத்தப்படும்.**

ii. நெல் மூட்டைகளைப் பாதுகாப்பாக அடுக்கி வைப்பதற்கு, 25,000 இரும்பு **இடைச்செருகுக் கட்டைகளும்,** நெல்லின் ஈரப்பதம் கண்டறிவதற்கான 2,500 **டிஜிட்டல் கருவிகளும்,** தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தலா ஒரு டிராக்டருடன் கூடிய **நெல் உலர்த்தும் இயந்திரமும்** கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும்.

**இத்திட்டம் பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து 480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

**இ) 2025-2026-ஆம் ஆண்டில், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் உணவு மானியத்திற்கு, 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

61. **நீர்வளத்துறை**

பாசனக் கட்டமைப்புகளைப் புனரமைத்து, நவீனப்படுத்தும் வகையில் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை நீர்வளத்துறை செயல்படுத்தி வருகிறது. அணைகளிலிருந்து பாசனத்திற்குத் திறந்துவிடப்படும் நீர், தங்கு தடையின்றிக் கடைமடைப் பகுதி வரை விரைந்து செல்ல ஏதுவாக **2025-2026 ஆம் ஆண்டில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1,071 தூர்வரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.** சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட 6,179.6 கி.மீ நீளமுள்ள ஆறுகள், வாய்க்கால்கள், கால்வாய்கள் மற்றும் வடிகால்கள் இதன் மூலம் தூர்வாரப்பட்டு **காவிரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட 25 மாவட்டங்களில் பாசன நிலங்கள் பயன்பெறும்.**

62.**கால்நடை பராமரிப்பு**

i. ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, நாட்டுக்கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள, **360 ஊரக ஏழை மகளிருக்கு, 50 சதவீத மானியத்துடன் நாட்டுக் கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு, ஆறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு** செய்யப்படும்.

ii. தமிழ்நாட்டில் உள்ள 2,741 கால்நடை மருந்தகங்களில் திட்டமிடப்பட்ட இனப்பெருக்க முறையில், மலட்டுத்தன்மையுள்ள **கால்நடைகளின் இனப்பெருக்கத்திறனை மேம்படுத்த, ஐந்து கோடியே 62 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

iii. தீவன விரயத்தைக் குறைப்பதற்காகவும், கால்நடைகளின் செரிமானத் தன்மையை அதிகரித்து உற்பத்தித்திறனைப் பெருக்குவதற்காகவும், மின்சாரத்தினால் இயங்கும் **3,000 புல் நறுக்கும் கருவிகள் சிறு, குறு உழவர்களுக்கு 50 சதவீத மானியத்தில்** வழங்கப்படும். **இதற்கென நான்கு கோடியே 83 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

iv. உயிர்ம வேளாண்மைக்கு அடிப்படையான, இயற்கை உரத்தயாரிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட **கால்நடைப் பண்ணைகளில் மாட்டுச் சாணம் கொண்டு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு,** உழவர்களுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படும். இதற்கென மூன்று கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

63.**பால்வளம்**

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி மூலம், விவசாயிகளுக்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட, கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப்பட்டு, நுகர்வோருக்குப் பாலாகவும், மதிப்புக்கூட்டிய பால் பொருட்களாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள், ஒரு மாடு வைத்து சிறிய அளவில் பால் உற்பத்தி செய்து வருகின்றனர். இவர்களுக்கு வருடம் முழுவதும் சீரான வருமானம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், **5,000 பால் உற்பத்தியாளர்கள், பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு நிரந்தர மற்றும் கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் "சிறிய அளவிலான பால் பண்ணை திட்டம்" தமிழ்நாடு அரசின் 4% வட்டி மானியத்துடன் செயல்படுத்தப்படும்.**

64.**மீன்வளம்**

i. தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நீர் நிலைகளின் **மீன் உற்பத்தித்திறனை அதிகரித்திடும் வகையில், 5,000 எக்டர் பரப்பளவுள்ள ஊராட்சிக் குளங்களில் ஒரு எக்டருக்கு 2,000 மீன்விரலிகள் வீதம் ஒரு கோடி மீன்விரலிகள், 75 இலட்சம் ரூபாய் செலவில் இருப்பு செய்யப்படும்.** இதன் வாயிலாக ஊரகப் பகுதிகளில் உள்நாட்டு மீன் உற்பத்தி அதிகரிப்பதோடு, ஊரக மக்களுக்குப் புரதச்சத்து மிகுந்த மீன் உணவு குறைந்த விலையில் கிடைக்கும்.

ii. பெருகிவரும் அலங்கார மீன்களின் தேவையினை நிறைவு செய்து அதன் வாயிலாக வேலை வாய்ப்பினை உருவாக்கிட 56 வண்ணமீன் வளர்ப்பு அலகுகள் அமைத்திட ஒரு கோடியே 55 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்,

iii. மீன்குஞ்சு உற்பத்தி, தீவிர மீன்வளர்ப்பு முறைகள், மதிப்புக் கூட்டுதல் ஆகிய நவீன தொழில்நுட்பங்களில் **1,000 மீனவ மகளிருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்** 38 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

iv. மீன்வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, மீன்வியாபாரம் போன்ற சுயதொழில்களைமேற்கொள்ள**10,000மீனவர்மற்றும்மீனவ உழவர்களுக்கு விவசாய கடன் அட்டை** வழங்கப்படும். இதன் மூலம் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகள் அதிகரித்திடும்.

v. தமிழ்நாட்டில் 46 அரசு மீன் பண்ணைகளில் ஆண்டொன்றுக்கு 12 கோடி மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிகரிக்கும் மீன்விரலிகளின் தேவையினைக் கருத்திற்கொண்டு, புதிய தாய் மீன்கள் கொள்முதல்,மீன்குஞ்சு இருப்புவிகிதத்தினைஅதிகரித்தல், கட்டமைப்பு வசதிகளைத் திறம்பட பயன்படுத்துவதன் மூலம் **அரசு மீன் பண்ணைகளின் உற்பத்தித்திறன் 15 கோடி மீன் விரலிகளாக அதிகரிக்கப்படும்.** இதன் வாயிலாக ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 10,000 டன் மீன் உற்பத்தி செய்யப்படும்.

## 65. ஊரக வளர்ச்சி

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழுள்ள 266 பணிகளில், 58 பணிகள் இயற்கை வள மேலாண்மைக்கெனவும் 58 பணிகள் கிராமப்புறக் கட்டமைப்புக்கெனவும், 150 பணிகள் பிரத்தியேகமாக வேளாண் சார்ந்த பணிகளுக்காகவும் ஒதுக்கப்படுகின்றன.

**2024-25 ஆம் ஆண்டில் இது வரையில் 80 ஆயிரத்து 707 இயற்கை மேலாண்மை பணிகள் இரண்டாயிரத்து 177 கோடி ரூபாய் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

2025-26 ஆம் ஆண்டில், பண்ணைக்குட்டைகள், புதிய குளங்கள், கசிவு நீர்க் குட்டைகள், நீர் செறிவூட்டுக் குழிகள், நீர் செறிவூட்டுத் தண்டுகள், செறிவூட்டுக் கிணறுகள், மண் வரப்பு, கல் வரப்பு போன்ற 80 ஆயிரம் பணிகள் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**மகளிர் சுய உதவிக்குழுக்கள்**

i. பயறு வகைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக பயறு வகைகளில் 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைக்க, தொகுப்புக்கு இரண்டு இலட்சம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கும் வகையில், 2025-26 ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதில் உற்பத்தி செய்யப்படும் விதைகளை, உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் உழவர்களுக்கு விநியோகிக்கும்.

ii. மகளிர் சுய உதவிக்குழுக்கள் நிலக்கடலை சாகுபடித் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, மகசூலை அதிகரிப்பதுடன், அறுவடைக்குப்பின், மதிப்புக்கூட்டி, நிலக்கடலையிலிருந்து, எண்ணெய், கடலை மிட்டாய், நிலக்கடலை வெண்ணெய், கடலைப் புண்ணாக்கு போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து, இலாபம் ஈட்டும் வகையில், 2025-26 ஆம் ஆண்டில் 30 நிலக்கடலை உற்பத்தித் தொகுப்புகள் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

66.**எரிசக்தி**

உழவர்களிடையே நீர்ப் பாசன வசதியை மேம்படுத்துவதற்காக, இதுவரை 23 இலட்சத்து 74 ஆயிரத்து 741 இலவச மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன. 2024–25 ஆம் ஆண்டு இலவச மின்சார மானியமாக இதுவரை 6 ஆயிரத்து 962 கோடியே 93 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2025–26 ஆம் ஆண்டில் உழவர்களுக்கு இலவச மின் இணைப்புகளுக்குத் தேவையான கட்டணத் தொகையாக, சுமார் எட்டாயிரத்து 186 கோடி ரூபாய் நிதியினை, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு அரசு வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**"வரப்பே தலகாணி**
**வைக்கோலே பஞ்சுமெத்தை**
**வேர்வையே பெருங்குளியல்**
**வெற்றுடம்பே பட்டாடை"**

என வாழும் வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் உழவர்கள். அதனால்தான், உழவர்களின் நலன் பேணி, அவர்தம் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் உயர் நோக்கத்துடனேயே செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசு, வேளாண்மையில் நிலையான வளர்ச்சி பெற்றிட, பல சீரிய முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

**"நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ;**
**அதனால், யான்உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"**

மக்கள் நெல்மணிகளையும், நீரையும் உண்டு வாழ்பவர்கள் தான் என்றாலும், அந்த நெல்லும், அவர்களுக்கு உயிர் அன்று; நீரும் உயிர் அன்று; மன்னன் தான் அவர்களுக்கு உயிர்;

எனவே, ஒவ்வொரு மன்னனும் தான்தான் அவர்களுக்கு உயிர் என்பதை உணர்ந்து, தன் உயிரைக் காப்பதுபோல் குடிமக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று புறநானூற்றுப்பாடலில் புலவர் மோசிகீரனார் கூறியுள்ளது போல், **மக்களின் நலமே, நல்லறம் என்று, நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கி, மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்து, உழவர்களின் வறுமையை ஒழித்து அவர்தம் வாழ்க்கையை மேம்படுத்துதல், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எப்பொழுதும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், நஞ்சற்ற, ஊட்டச்சத்து மிகுந்த உணவையளித்தல்,** உழவர்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து, தொடர்ந்து வேளாண் தொழில்புரிய சீரிய முயற்சிகளெடுத்து அவர்களை ஊக்கப்படுத்துதல், வேளாண்மை சிறந்திட இயற்கை அன்னை வாரி வழங்கியுள்ள நல்வளங்களைச் சீராகப் பயன்படுத்தும் முறைகளைக் கையாளுதல், வேளாண்பயிர்களுக்குத் தேவையான இடுபொருட்கள் கிடைக்கச்செய்து அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நிலையான வளர்ச்சியை அடைதல் **ஆகிய நற்பணிகளை செவ்வனே மேற்கொள்ள வேளாண்மை – உழவர் நலத்துறைக்கு வாய்ப்பினை வழங்கியமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.**

**ஏழு விதமான வேளாண் காலநிலை மண்டலங்களுக்கும், அங்கே சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கும் ஏற்றவாறு, "தனி வேளாண் நிதிநிலை அறிக்கை"** தந்து உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறவும், தமிழ்நாடு மக்கள் நலம் பெறவும் பல்வேறு திட்டங்களை தீட்டி **"சொல்வதைச் செய்வோம் –**

**சொல்லாததையும் செய்வோம்"** என்று செயல்படுத்தி வரும், **கண்ணை இமை காப்பது போல் கண் துஞ்சாமல், உழவர் நலம் காக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில்** உழவர் நலன் காக்கும் உன்னதப்பணிகளில் சீரிய முயற்சிகளெடுத்து மேன்மேலும் வலுச்சேர்த்து சீர்படுத்தி, வேளாண்பெருமக்களின் வாழ்க்கையைத் தொடர்ந்து வளப்படுத்திடும் வகையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதே இந்த ஐந்தாம் வேளாண் நிதிநிலை அறிக்கையாகும்.

கடந்த நான்காண்டுகளில் செவ்வனே திட்டங்களைச் செயல்படுத்தியது போலவே, வரும் நிதியாண்டிலும், அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, திட்டங்கள் அனைத்தையும், மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட உறுதிகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சீர்மிகு தமிழ்நாட்டின் நான்கு வேளாண் நிதிநிலை அறிக்கைகளையும் செவ்வனே தயாரித்து இந்த மாமன்றத்தில் படைத்தது போலவே, உழவர் நலன் பேணும் ஐந்தாம் வேளாண் நிதிநிலை அறிக்கையினையும்,பல்வேறு சிறப்புத் திட்டங்களுடன் உருவாக்கிட, எனக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்களுக்கும், நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர், திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், திரு.வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு!**

**வளர்க வேளாண்மை! ஓங்குக உழவர்நலன்!**

**நன்றி! வணக்கம்.**

## அட்டவணை

## வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கான 2025-2026ஆம் ஆண்டிற்கான மூலதனம் மற்றும் வருவாய் ஒதுக்கீடு

ரூபாய் ஆயிரத்தில்

| வ. எண். | துறை | BE 2024-25 | BE 2025-26 | | |
|---|---|---|---|---|---|
| | | | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| 1 | வேளாண்மைத்துறை | 11,194,47,47 | 104,82,54 | 11,470,75,33 | 11,575,57,87 |
| 2 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | 1,621,60,32 | ... | 1,665,16,44 | 1,665,16,44 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் துறை | 714,54,27 | 7,18,28 | 702,51,21 | 709,69,49 |
| 4 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 209,90,34 | 3 | 245,53,19 | 245,53,22 |
| 5 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 664,31,89 | 15,00,00 | 693,84,19 | 708,84,19 |
| 6 | விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை | 69,44,28 | ... | 73,86,79 | 73,86,79 |
| 7 | சர்க்கரைத்துறை | 254,06,20 | ... | 251,65,88 | 251,65,88 |
| 8 | கால்நடை பராமரிப்புத்துறை | 1,088,22,63 | 31,25,41 | 1,154,62,03 | 1,185,87,44 |
| 9 | பால்வளத்துறை | 581,91,81 | 580,00,02 | 89,17,81 | 669,17,83 |
| 10 | மீன்வளம்-மீனவர் நலத்துறை | 1,320,96,85 | 770,41,29 | 701,67,74 | 1,472,09,03 |
| 11 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் | 346,14,64 | 10,00,00 | 321,23,42 | 331,23,42 |
| 12 | தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக் கழகம், நாகப்பட்டினம் | 48,99,29 | ... | 35,39,16 | 35,39,16 |
| 13 | கூட்டுறவுத்துறை (பயிர்க்கடன் போன்றவை) | 700,00,00 | ... | 700,00,00 | 700,00,00 |
| 14 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) | 10,501,14,00 | 1 | 14,000,00,00 | 14,000,00,01 |
| 15 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (MGNREGS , ஊரக சாலைகள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், அனைத்துக்கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்) | 7,606,85,06 | 2,267,63,00 | 3,877,32,27 | 6,144,95,27 |
| 16 | உணவு பதப்படுத்துதல் | 177,79,43 | ... | 177,79,45 | 177,79,45 |
| 17 | பட்டு வளர்ச்சித்துறை | 111,12,28 | ... | 106,14,07 | 106,14,07 |

| வ. எண். | துறை | BE 2024–25 | BE 2025–26 | | |
|---|---|---|---|---|---|
| | | | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| **18** | வனத்துறை (வேளாண் காடுகள், மனித–விலங்கு மோதல்) | 1,107,93,55 | 610,92,50 | 697,81,20 | 1,308,73,70 |
| **19** | வருவாய்த்துறை (பயிர் சேதம், உழவர் பாதுகாப்புத்திட்டம் ) | 379,36,67 | ... | 344,75,18 | 344,75,18 |
| **20** | கால்வாய்கள் புனரமைத்தல்–பெரும் பணிகள் | 3,581,73,64 | 3,954,96,41 | ... | 3,954,96,41 |
| | **மொத்தம்** | **42,280,54,62** | **8,352,19,49** | **37,309,25,36** | **45,661,44,85** |